# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.16/2019

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமி | மதம் | : இந்து |
| க/பெ | : தினகரன் | ஜாதி | : -- |
| வயது | : 44 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**01.12.2025**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி தினகரன் எனது கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி என்ன தகவல் சொன்னார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் கணவர் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் 160 ஆகும். நான் குடியிருக்கும் வீட்டின் பழைய கதவு எண் 160 என்றால் சரிதான். நான் குடியிருக்கும் மாடி வீட்டின் புல எண் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தெரியாது. அந்த மாடி வீடு அரசாங்கம் கொடுத்த வீடா அல்லது நாங்கள் கட்டிய வீடா என்றால் நாங்கள் கட்டிய வீடாகும்.

2. வாதி எந்த புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண் ஞாபகமில்லை. நாங்கள் இருந்த குடிசை வீட்டிற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த குடிசை வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் 160 ஆகும். அந்த மாடி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் மின்இணைப்பு எண் ஞாபகமில்லை. மின் இணைப்பு உள்ளது. குடிசை வீட்டின் மின் இணைப்பு எண்.267 ஆகும். புல எண்.153/4 புதிய புல எண்.153/4I, 4J க்கு எங்களிடம் பட்டா, சிட்டா, உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் என் கணவர் பத்திரம் எழுதி வாங்கியுள்ளார்.

என் கணவர் என்ன பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் எங்களுக்கு வீடு தருகிறோம் என்று எழுதி கொடுத்துள்ளார்கள். யார் யாருக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் ரங்கசாமியின் பிள்ளைகள் என் கணவருக்கு எழுதி கொடுத்துள்ளார்கள். எவ்வளவு தொகைக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் ஞாபகமில்லை. எந்த தேதி மாதத்தில் எழுதி கொடுத்தார்கள் என்றால் 2004ம் வருடமாகும். தேதி, மாதம் ஞாபகமில்லை.

3. எனது எதிர்வழக்குரை, பிரமாண வாக்குமூலத்தில் சட்டப்படியான உரிமையாளரிடமிருந்து ரூ.100/—க்கு வாய் மொழியாக என் கணவரின் பாட்டி கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். என் பாட்டி பெயர் என்ன என்றால் லட்சுமி ஆகும். சட்டப்பூர்வமான உரிமையாளர் என நான் சொல்லியிருப்பது யார் என்று குறிப்பிட்டு நான் எனது எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஆமாம். எனது முன்னோர்கள் வழக்கு சொத்தை ஆண்டு அனுபவித்து வந்ததாக சொல்லியிருப்பதில் முன்னோர்கள் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பெயர் சொல்லவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)